நாள்: 28.06.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமணி

### புகையிலை விதைகள் விற்பனை

புகையிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, வேடசந்தூர் மத்திய புகையிலை ஆராய்ச்சி மையத்தில் ஜூலை முதல் விதை விற்பனை துவங்க உள்ளது.

இதுகுறித்து புகையிலை மையத்தின் தலைவர் குமரசேன் தெரிவித்துள்ளது: ஆகஸ்ட் மாதம் புகையிலை நாற்று நடுவதற்கு சிறந்த பருவமாகும். அதை முன்னிட்டு புகையிலை விதை விற்பனை, வரும் ஜூலை முதல் வாரத்தில் துவங்க உள்ளது. விதை தேவைப்படும் விவசாயிகள், அலுவலக நாள்களில் காலை 8 முதல் 11.30 மணி வரையிலும், மாலை 2 முதல் 4 மணி வரையிலும் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரை, 04551 - 260243 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

### கால்நடைத்துறை வளர்ச்சிப் பணிகள்: இணை இயக்குநர் ஆய்வு

**சிவகங்கை**;மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டவரும் வளர்ச்சிப் பணிகளை கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் நாகராஜன் நேரில் பார்வையிட்டு வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டங்களான மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், உலர் தீவனம் விநியோகத் திட்டம், நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம், கறிக்கோழி வளர்ப்புத் திட்டம், விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம், விலையில்லா செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் என செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைப் பார்வையிட கால்நடை பராமரிப்புத் துறையினர் மற்றும் செய்தியாளர்கள் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது காளையார்கோயில் ஒன்றியம் கீரனூரில் கே. சத்தியா என்ற பயனாளியின் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புப் பண்ணையை பார்வையிட்டனர். இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு முறை குறித்த முறை யான பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 2014-2015 நிதியாண்டில் சிவகங்கை மாவட்டத்தில் 160 பயனாளிகளுக்கு பண்ணை அமைக்க அரசு மானியத்துடன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காளையார்கோயில் ஒன்றியம் ஏ. வேலாங்குளம் ஊராட்சி செவல்கண்மாயில் அய்யாச்சாமி என்ற பயனாளி கோ-4 தீவனப்புல் வளர்ப்பதை பார்வையிட்டனர்.

அப்போது பயனாளி கூறுகையில், 25 சென்ட் நிலத்தில் தீவனப்புல் வளர்த்து வருகிறேன். அதற்கு மானியமாக ரூ. 3 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதுவரை 7 முறை தீவனப்புல் அறுவடை செய்துள்ளேன் என்றார்.

முதல்வரின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப தேர்வு செய்யப்பட்ட தரமான பால் உற்பத்தி தரும் பசுக்கள் வாங்கி வழங்கப்படுகிறது. மாநிலத்தில் பால் உற்பத்தியை பெருக்குவதும் மக்களின் வாழ்வாதாரத்தினை உயத்துவதும்தான் திட்டத்தின் நோக்கம். சிவகங்கை மாவட்டத்தில் 2011 முதல் 2013 வரை 1905 விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பசுக்கள் 1,142 கன்றுகள் ஈன்றுள்ளன. இதன் மூலம் பயனாளிகள் குடும்ப தேவைக்கு போக நாள் ஒன்றுக்கு 4.8 லிட்டர் வீதம் 8,165 லிட்டர் பால் ஆவின் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது.

கல்லல் ஒன்றியம் மாலைக்கண்மாய் கிராமத்தில் விலையில்லா வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் 4 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆடுகளுக்கான விலை மற்றும் போக்குவரத்துக் கட்டணம், காப்பீட்டுத் தொகை மற்றும் செலவினங்கள் உள்பட 13,200 வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர். இத்திட்டத்தின் மூலம் 2011 முதல் 2013 வரை 9,376 பயனாளிகளுக்கு தலா 4

ஆடுகள் வீதம் 37,504 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை 24,461 குட்டிகள் ஈன்றுள்ளது. 8,003 ஆடுகள் கருவுற்றுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித்திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான சிறந்த துறை விருது தமிழக முதல்வரால் இந்தத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) மரு. நாகராஜன் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் பயணத்தின்போது கால்நடைப் பாரமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் கருணாகரன், மணிவண்ணன், உதவி மருத்துவர்கள் சுகன்யா, பாலமுருகன், தேவதாஸ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**<u>கடலாடியில் விவசாயிகளுக்கு ஆலோசனை முகாம்</u>**

**முதுகுளத்தூர்**

கடலாடி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயிகளுக்கு ஆலோசனை முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தக்குமாரின் உத்தரவின் பேரில், கடலாடி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை உற்பத்தியை பெருக்குவது குறித்த ஆலோசனை முகாம் நடைபெற்றது.

முகாமில் கடலாடி ஒன்றியக்குழுத் தலைவர் வி.மூக்கையா தலைமை வகித்தார்.

வேளாண் துணை இயக்குநர் உதுமான் முகைதீன் அட்மா, வேளாண் உதவி இயக்குநர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் உற்பத்தியை பெருக்குவது குறித்து வேளாண் அலுவலர்கள் பாலமுருகன், புவனேந்திரன் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

வேளாண் பொறியியல் துறை பார்த்தசாரதி, விற்பனைத்துறை சந்திரகுமார், உதவி கால்நடை மருத்துவர் ராஜசொக்கப்பன் ஆகியோர் முகாமில் கலந்து கொண்டனர்.

முடிவில் வட்டார மேலாண்மை தலைவர் வெள்ளைச்சாமி நன்றி தெரிவித்தார்.

வட்டார மேலாண்மை அலவலர்கள் ரெங்கநாதன், மாரீஸ்வரன், சந்திரகுரு ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## பவானிசாகர்: வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு களப் பயிற்சி

**சத்தியமங்கலம்**

வாணவராயர் வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு பவானிசாகர் வட்டாரத்தில் உள்ள விவசாய நிலங்களில் களப் பயிற்சியளிக்கப்படுகிறது.

ஊரக வேளாண் பயிற்சி மற்றும் கிராமத் தங்கல் திட்டத்தின்கீழ் பொள்ளாச்சி, வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பவானிசாகர் வட்டாரத்தில் தங்கி பயிற்சி பெற்றுவருகின்றனர்.

அவர்கள், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை போன்ற வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து பயிற்சிபெற்றனர். விவசாயிகளிடமும் நேரடியாகத் தொடர்பு கொண்டு நவீனத் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், பயிர் சாகுபடி உள்ளிட்டவை குறித்தும் விவசாயிகளிடம் நேரடியாகக் கேட்டறிந்து கள அனுபவம் பெற்று வருகின்றனர். பவானிசாகர் வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்களின் கண்காணிப்பில் அவர்கள் பயிற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி

**சத்தியமங்கலம்**

சத்தியில் நடைபெற்ற அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி முகாமில் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு விற்பனை வாரிய உதவி இயக்குநர் வி.குணசேகரன் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசியது: தென்னை, மக்காச்சோளம், நெல், மஞ்சள் மற்றும் நிலக்கடலை போன்ற பயிர்களில் அறுவடையின்போதும் அதன் பின்னரும் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து இங்கு விளக்களிக்கப்பட்டது. மேலும், ஈரப்பதங்கள், தரம் பார்த்தல், கல், மண், சருகு, செதில் மற்றும் பூச்சி நோய் தாக்கியவை மற்றும் உடைத்தவை ஆகியவற்றை நீக்கி சுத்தமாக தரம் பிரித்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றுவதன் மூலமாகக் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றார். உழவர் சந்தை நிர்வாக அலுவலர் எஸ்.ஆர்.லட்சுமி நாராயணன் பேசுகையில்,

பயிர்க்குழு அமைத்தல், புரிந்துணர்வு ஒப்பந்தம் புரிதல், ஊரக வணிக மையத்தின் மூலமாக விற்பனை வாய்ப்புகள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பயன்பாடுகள், குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்கு ஆகியன குறித்து எடுத்துக்கூறினார்.

இதில், வேளாண்மை அலுவலர் சிவபிரகாஷ், துணை வேளாண் அலுவலர் கலைச்செல்வன், உதவி வேளாண் அலுவலர்கள் சி.ராஜ்குமார், டி.தமிழ்ச்செல்வன், டி.செந்தில்குமார் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் வி.சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு உபகரணங்கள் அளிப்பு**

**தருமபுரி**,

தருமபுரியில் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு ரூ.2.62 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், பட்டு வளர்ப்பு விவசாயிகள் 5 பேருக்கு விசைத் தெளிப்பான், தட்ப வெப்ப நிலைப் பராமரிக்கும், ஹுமிடிபையர் கருவி, டிஜிட்டல், ஹைக்ரோ மீட்டர், பட்டுப் புழுக்கள் வடிகட்டுவதற்கு பிளாஸ்டிக் நெடரிக்கா, மல்பரி தண்டு அறுவடை செய்வதற்கான இயந்திரம், பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் ஆகியவை தலா ரூ.52 ஆயிரம் மதிப்பில் மொத்தம் ரூ.2.62 லட்சம் மதிப்பிலான உபகரணங்களை ஆட்சியர் கே.விவேகானந்தன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், வேளாண் இணை இயக்குநர் கே.மோகன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண் ஆர்.சுசிலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு**

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெள்ளிக்கிழமை நொடிக்கு 5,345 கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், அங்குள்ள அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளதால், கூடுதல் தண்ணீர் மேட்டூர் அணைக்கு திறந்து விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், வியாழக்கிழமை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 4,141 கன அடியாக இருந்து. இது, வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 5,345 கன அடியாக அதிகரித்தது.

இதையடுத்து, வெள்ளிக்கிழமை அணையின் நீர்மட்டம் 43.58 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 2 ஆயிரம் கன அடிவீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 14 டி.எம்.சி.யாக உள்ளது.

அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும், நீர் வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் இரு நாள்களில் ஒரு அடி உயர்ந்துள்ளது.

## பசுந்தீவன உற்பத்தித் திட்டம்:விவசாயிகள் முன்பதிவு செய்யலாம்

**நாமக்கல்**

பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தில் பயன்பெறத் தகுதியுடைய விவசாயிகள் முன்பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனத்தை பெருக்கும் வகையில் மாநில பசுந்தீவன உற்பத்தித் திட்டம் என்ற புதிய திட்டத்தை தமிழக அரசு நிகழாண்டில் (2014-15) செயல்படுத்த உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பல்லாண்டு தீவனப் பயிர்களான கோ-3, கோ-4 ரகம் பயிரிடும் விவசாயிகளுக்கு கால் ஏக்கருக்கு நூறு சதவீத மானியமாக ரூ.2000ம் வழங்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சம் ஒரு ஏக்கருக்கு மானியம் பெறலாம்.

குறைந்தபட்சம் 2 கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் இந்தத் திட்டத்தில் பயன்பெற முடியும். இந்த மாநில பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தின் கீழ் நாமக்கல்

மாவட்டத்தில் 400 ஏக்கரில் தீவனப் பயிர் சாகுபடி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பாசன வசதியில்லாத விவசாயிகளுக்கு மானாவாரி தீவனப்பயிர்களான சோளம், தட்டைப் பயிர் விதைகள் மானியமாக வழங்கப்பட உள்ளது. கால் ஏக்கருக்கு 8 கிலோ சோளம், ஒரு கிலோ தட்டைப்பயிர் வழங்கப்படும். அதிகபட்சம் ஓர் ஏக்கர் வரை விவசாயிகளின் தேவைக்கேற்ப விதைகளை மானியமாக பெறலாம்.

மேலும், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் 200 விவசாயிகளுக்கு மழைத்தூவான் கருவி 75 சத மானியத்தில் வழங்கப்படும். கால்நடைகளுக்கு பசுந்தீவன தேவையை நிறைவு செய்யும் வகையில் அகத்தி விதைகள் ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 250 ஏக்கருக்கு வழங்கப்பட உள்ளது.

அலோசா பாசி உற்பத்தி செய்வதற்காக 350 அலகுகள் அமைக்க அலகு ஒன்றுக்கு ரூ.1600 மானியமாக வழங்கப்படும்.

ஏற்கெனவே கடந்த ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்கள் மீண்டும் பயன்பெற இயலாது. தவிர, ஒருவர் ஒரு திட்டத்தில் மட்டுமே பயன்பெற முடியும்.

விருப்பமுள்ள விவசாயிகள் அருகே உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகள் தேர்வு செய்யப்படுவர் என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>ஊத்தங்கரை பகுதியில் பரவலாக மழை</u>**

**ஊத்தங்கரை,**

ஊத்தங்கரை பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

இந்தப் பகுதியில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருந்து வந்தது.

இந்த நிலையில், திடீரென மழை பெய்தது மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

**<u>காபி செடியில் தண்டுத் துளைப்பான் நோயைக் கட்டுப்படுத்த அறிவுரை</u>**

**ஏற்காடு,**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் காபி செடியில் தண்டுத் துளைப்பான் நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு காபி வாரியம் அறிவுரை வழங்கியுள்ளது.

ஏற்காடு பகுதியில் காபி பயிரிடும் விவசாயிகளுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய அளவு பருவ மழை கிடைக்க வில்லை.

மேலும், நிகழாண்டிலும், மழை கிடைக்க வாய்ப்புக் குறைவு என்று வானிலையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கால சூழலுக்கு ஏற்ப காபி பயிரிடும் விவசாயிகள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏற்காட்டில் 13 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில்

சுமார் 2,500 விவசாயிகள் காபி விவசாயம் செய்து வருகின்றனர். சேர்வராயன் மலையில் காபிச் செடிகளில் வெள்ளைத் தண்டு துளைப்பான் நோய்

பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த காபிச் செடிகளுக்குப் போதுமான நிழல் பராமரிப்பு செய்து, காபிச் செடிகளை பாதுகாக்க வேண்டும்.

மேலும், ஏப்ரல், மே உள்ளிட்ட வறட்சி மாதங்களில் காபி பழம் அறுவடைக்குப் பின்பு, காபித் தோட்டங்களில் நிழல் குறைப்பைத் தவிர்க்க வேண்டும். சேர்வராயன் மலைப்பகுதி, பாறைகள் நிறைந்த பூமியாகக் காணப்படுவதால், பாறையின் வெப்பத்துக்கு வெள்ளைத் தண்டு துளைப்பான் பூச்சிகள் அதிக அளவு பரவுவதால், காபித் தோட்டங்களில் சில்வர் ஓக் மரங்களை மட்டும் வளர்க்காமல் பலவகையான நிழல் தரும் மரங்களை வளர்த்து நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

மேலும், இந்த நோய் பாதிக்கப்பட்ட காபித் தோட்ட விவசாயிகள் ஏற்காடு காபி வாரியத்தை அணுகி அல்லது தொலைபேசியி தொடர்பு கொண்டால் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்று, ஏற்காடு காபி வாரிய முதுநிலை அலுவலர் ராமகவுண்டர் தெரிவித்துள்ளார்.

**<u>வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு மண் மாதிரி எடுக்கும் பயிற்சி</u>**

**புதுக்கோட்டை**

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு மண் மாதிரி எடுக்கும் களப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் 11 மாணவர்கள் கொண்ட குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று வரும் பயிர் சாகுபடி குறித்து களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒருபகுதியாக அறந்தாங்கி ஒன்றியம், எருக்கலாங்கோட்டை கிராமத்தில் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் பரிசோதனைக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இதில் வம்பன் மண் பரிசோதனை திட்டச் செயலர் மாணிக்கவள்ளி பங்கேற்று பயிர் வளர்ச்சிக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் நிலை குறித்து அறிந்துகொள்ள மண் பரிசோதனை செய்வதன் அவசியம் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து, விவசாயிகள் வயலில் வேளாண் கல்லூரி மாணவர்கள் மூலம் மண் மற்றும் பாசன நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு ஆராய்ச்சிக்காக கொண்டு செல்லப்பட்டது. மேலும், வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு மண்மாதிரி எடுக்கும் முறை குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

**<u>சிறுதானியங்களில் உணவு உற்பத்தி பயிற்சி முகாம்</u>**

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அருகே கீழக்குறிச்சியில் நபார்டு உதவியுடன் சிறுதானியங்களில் உணவு உற்பத்தி, வாழ்வாதாரத்தை பெருக்குவது குறித்த சிறுகுறு விவசாயிகளுக்கான புத்தாக்கப்பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கீழக்குறிச்சி ஜி.வி.என். தொண்டு நிறுவனப் பயிற்சி மையத்தில் நடைபெற்ற முகாமுக்கு, புதுக்கோட்டை மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம் தலைமை வகித்து பயிற்சியைத் தொடக்கி வைத்துப் பேசியது:

சிறுதானியங்கள் உற்பத்தியில் அரசு துறைகளில் கிடைக்கும் மானியங்கள், சிறுதானியங்கள் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகள் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ளச் செய்வதே இந்த முகாமின் நோக்கம். அத்துடன், விதைப் பண்ணை, நாற்றாங்கால் பண்ணை உருவாக்குவது, கூட்டமைப்பு மூலம் சிறுதானியங்கள் பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட அரசு திட்டங்களைப் பெறுவது,

இயற்கை விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள்களை தயாரிப்பது குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இதை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் மூலம் அன்னவாசல், குன்றாண்டார் கோவில் ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆண்டுக்கு 50 சிறுகுறு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் லலிதா திட்ட செயல்பாடு பற்றியும், முன்னோடி விவசாயி தாயினிப்பட்டி கே. கோவிந்தராசு சிறுதானிய உற்பத்தி மற்றும் மழைநீர் சேகரிப்பு குறித்தும் பேசினர். முகாமில் சிறுகுறு விவசாயிகள் 50 பேர் பங்கேற்றனர்.

முன்னதாக, ஜி.வி.என் அறக்கட்டளை இயக்குநர் என். சுப்பிரமணியன் வரவேற்றார். திட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ். தனபாக்கியம் நன்றி கூறினார்.

## <u>தஞ்சாவூரில் ரூ. 1.50 கோடியில் உழவர் மையம் திறப்பு</u>

**தஞ்சாவூர்**

தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் ரூ. 1.50 கோடியில் அமைக்கப்பட்ட உழவர் மையத்தை தமிழக முதல்வர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மாவட்ட விவசாயிகள் வேளாண் சாகுபடி தொடர்பான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் ஒரே இடத்திதல் பெற்றுக்கொள்ள வசதியாக உழவர் மையங்கள் ஏற்படுத்தத் தமிழக முதல்வர் ஆணையிட்டார்.

இதன் அடிப்படையில் தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள வேளாண்மை விற்பனைக் குழு வளாகத்தில் உழவர் மையம் அமைக்க முடிவு செய்து, தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டடமாகக் கட்டப்பட்டுள்ளது.

இதில், தரைத்தளம் 4,482 சதுர அடியும், முதல் தளம் 4,482 சதுர அடியும் என மொத்தம் 8,964 சதுர அடி கொண்ட கட்டடத்தில் விதை பரிசோதனை ஆய்வகம்,

வேளாண்மை அலுவலகம், வேளாண் இடுபொருட்கள் வைப்பறை, ஏடிஎம் மற்றும் இணையதளம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புதிய உழவர் மையக் கட்டடம் திறக்கப்பட்ட பிறகு, தமிழக முதல்வருக்குக் காணொலிக் காட்சி மூலம் நன்றி தெரிவித்த மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன், பிறகு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மக்களவை தொகுதி உறுப்பினர் கு. பரசுராமன், சட்டப்பேரவை உறுப்பினர் எம். ரெங்கசாமி, மாவட்ட பால் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆர். காந்தி, மாநகராட்சி மேயர் சாவித்திரி கோபால், மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>"கோடை உழவு செய்தால் கூடுதல் மகசூல்'</u>**

**பெரம்பலூர்**,

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் கோடை உழவு செய்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடையில் உழவு செய்வதால் களைகள் உற்பத்தியாவது தவிர்க்கப்படுவதோடு, பயிர் சாகுபடியின்போது களை பிரச்னை வெகுவாக குறைகிறது. உழவு செய்யாத வயல்களில் மழைபொழிவின்போது, மழைநீர் வயலில் சேகரிக்கப்படாமல் வீணாகிறது. இதனால், மேல் மண் அரிமானம் ஏற்படுவதோடு மண்ணிலுள்ள ஊட்டச்சத்துக்களும் விரையமாகின்றன. உழவு செய்வதால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு, வயல்களிலேயே மழைநீர் சேகரிக்கப்படுவதால் நிலப்பரப்பின் கீழ் ஈரம் காக்கப்பட்டு, பூச்சி பூஞ்சாணங்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன. உழவு செய்வதனால் முன்பருவ விதைப்பு செய்வதற்கு வசதியாகும். ஏற்கெனவே உழவு செய்த நிலத்தில் மறு உழவு செய்து விதைப்பது சுலபமாவதோடு, அடிமண் இருக்கம் நீக்கப்படுவதுடன் நீர் கொள் திறனும் அதிகரிக்கப்பட்டு, விளைச்சலும் 20 சதவீதம் வரை அதிகரிக்கிறது. எனவே, விவசாயிகள் கோடை உழவு செய்து எதிர்வரும் பருவ காலங்களில் அதிக மகசூல் பெற்று பயனடையலாம்.

**<u>மாம்பழங்களை பழுக்க வைக்கும் புதிய முறை</u>**

**கன்னியாகுமரி**,

மாம்பழங்களை பழுக்க வைக்கும் புதிய சுகாதார முறை குறித்து கன்னியாகுமரி அரசு தோட்டக்கலை அலுவலர் குமரேசன் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து வெள்ளிக்கிழமை அவர் கூறியதாவது: அனைத்து மக்களாலும் விரும்பி உண்ணப்படும் பழங்களில் மாம்பழம் சிறந்து விளங்குகிறது. குமரி அரசு பழப்பண்ணையில் அல்போன்சா, நீலம், பங்கனப்பள்ளி, ஹிமாயுதீன், பெங்களூரா, கலப்பாடு உள்ளிட்ட ரகங்கள் அதிகமாக பயிர் செய்யப்படுகிறது.

இப்பண்ணையில் சுகாதாரமான முறையில் மாம்பழங்கள் பழுக்க வைக்கப்படுகின்றன. இந்த முறைப்படி பழுக்க வைக்கப்படும் பழங்கள் சுவையாகவும், இயற்கையான மணத்துடனும் உள்ளன. இவை பண்ணையின் வெளிப்பகுதியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பழுக்க வைக்கும் முறை: புதிய முறைப்படி மாம்பழங்களை பழுக்க வைக்க காற்றுப் புகாத அறைகளில் எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் நீருக்கு 2 மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து 5 இடங்களில் வைக்க வேண்டும். இந்த கலவையில் இருந்து எத்திலின் வாயு தேவையான அளவு வெளிவர ஒரு லிட்டர் கலவைக்கு 2 கிராம் சோடியம் ஹைட்ராக்சைடு மருந்தை கலக்க வேண்டும். மாம்பழங்களின் ரகங்களைப் பொருத்து 12 மணி நேரம் முதல் 24 மணி நேரத்தில் நன்றாக பழுத்த பழங்களைப் பெறலாம். இதற்கு தேவையான எத்திரல் வளர்ச்சி ஊக்கி உர விற்பனை நிலையங்களிலும், சோடியம் ஹைட்ராக்சைடு சாதாரண ரசாயான பொருள் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும் என்றார் அவர்.

**<u>கார் பருவ சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்!</u>**

**திருநெல்வேலி**,

கார் பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து ஒருசில தினங்களில் தண்ணீர் திறக்கப்பட இருப்பதால், தாமிரவருணி பாசனத்தில் நாற்றுப் பாவுதல் போன்ற சாகுபடி பணிகளைத் தொடங்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து ஜூன் மாதம் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். நிகழாண்டில்

பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் குறைந்து காணப்படுவதால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தென்மேற்குப் பருவமழையும் தாமதம் ஆவதால் சாகுபடி காலமும் தாமதமாகும் சூழல் உருவாகியுள்ளது.

இதனிடையே பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர் இருப்பைப் பொறுத்து இவ்விரு அணைகளில் இருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி ஆற்றின் தொடக்கத்தில் உள்ள வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய் ஆகிய கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு ஒருசில தினங்களில் தண்ணீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, தாமிரவருணி பாசனத்தில் விவசாயிகள் சாகுபடி பணிகளைத் தொடங்க தயாராகி வருகின்றனர். இப்பாசனத்தில் 110 நாள் வயதுடைய ஆடுதுறை 45, அம்பை 16 போன்ற ரகங்களை நாற்று பாவத் தயாராகி வருகின்றனர்.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் கன்னடியன் கால்வாய் பாசனத்தில் வெள்ளங்குளி, கோபாலசமுத்திரம் உள்பட சில ஊர்களில் குளங்களில் உள்ள நீரைக் கொண்டு விவசாயிகள் நாற்றுப் பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒருசில இடங்களில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இப்பாசனத்தில் வாழைப் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வாழைப் பயிருக்கு கிணறு, குளங்களில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

அணைகளின் நீர்மட்டம்: வெள்ளிக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 58.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 70.87 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 63.22 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 51.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 67.50 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 45.93 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 55.00 அடியாகவும், குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.10 அடியாகவும், நம்பியாறு அணையின் நீர்மட்டம் 10.76 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 359 கனஅடி நீர்வரத்து இருந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து 500 கனஅடி தண்ணீர் ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு அணையிலிருந்து பாசனத்துக்கு பெருங்கால் மதகில் 75 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

ஜூலை 3இல் அணைகள் திறப்பு? கடனாநதி, ராமநதி அணைகள் மூலம் பாசனம் பெறும் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு ஜூலை 3ஆம் தேதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினமலர்

**வரத்து அதிகரிப்பு: மீன் விலை வீழ்ச்சி**

**ராமநாதபுரம்**: இலங்கை கடற்படை கெடுபிடியால் ராமேஸ்வரம் மீனவர்கள் குறைந்த எண்ணிக்கையில் மீன்பிடிக்க செல்வதால் இங்கு மீன்பாடு குறைந்தாலும், தூத்துக்குடியில் இருந்து மீன் வரத்து அதிகரித்துள்ளதால் மீன் விலை வீழ்ச்சியடைந்தது. கடந்த வாரம் கிலோ ரூ.60க்கு விற்ற காரல் தற்போது 40, ரூ.60க்கு விற்ற சூடை ரூ.45, ரூ220க்கு விற்ற பாரை ரூ.200, ரூ.450க்கு விற்ற சீலா மீன் ரூ.430, ரூ.130க்கு விற்ற விளை மீன் 110, ரூ.90க்கு விற்ற நகரை 75, ரூ.280க்கு விற்ற நண்டு ரூ.260, ரூ.350க்கு விற்ற இறால் ரூ.330, ரூ.260க்கு விற்ற ரூ.245, ரூ.100க்கு விற்ற திருக்கை ரூ.80 என விற்கப்படுகிறது.

**வல்லூரில் மின் உற்பத்தி துவக்கம்**

**சென்னை**: சென்னையை அடுத்த, வல்லூர் அனல் மின் நிலையத்தில், பழுது செய்யப்பட்டதை அடுத்து, இரண்டு அலகுகளில், மீண்டும், மின் உற்பத்தி துவங்கியது.

சென்னை அடுத்த வல்லூரில், தமிழ்நாடு மின் வாரியம், தேசிய அனல் மின் கழகத்துடன் (என்.டி.பி.சி.,) இணைந்து, அனல் மின் நிலையம் அமைத்து உள்ளது. இங்கு, தலா, 500 மெகா வாட், திறன் கொண்ட, மூன்று அலகுகள் உள்ளன. தற்போது, இரண்டு அலகுகளில், வணிக ரீதியாக, மின் உற்பத்தி செய்யப்படுவதில், தமிழகத்திற்கு, 715 மெகா வாட் வழங்கப்படுகிறது. வல்லூரில், கடந்த, 22ம் தேதி, இரண்டாவது அலகு; 24ம் தேதி, முதல் அலகில்,'பாய்லர் டியூப்

பஞ்சர்' காரணமாக, மின் உற்பத்தி, தற்காலிமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில், இரண்டு அலகுகளிலும், நேற்று, பழுது சரி செய்யப்பட்டதை அடுத்து, மீண்டும், மின் உற்பத்தி துவங்கியது. இதுகுறித்து, எரிசக்தி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வல்லூரில், தற்போது, ஒவ்வொரு அலகிலும், சராசரியாக, 400 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. விரைவில், படிப்படியாக, 500 மெகா வாட்டாக உற்பத்தி உயர்த்தப்படும்' என்றார்.

**கரீப் பயிர் பரப்பு 131 லட்சம்ஹெக்டேரை தாண்டியது**



**புதுடில்லி:**கரீப் பருவ பயிர்களின் சாகுபடி பரப்பு, நடப்பு ஜூன் 27ம் தேதி நிலவரப்படி, 131 லட்சம் ஹெக்டேரை தாண்டியுள்ளது.இதில், 21.91 லட்சம் ஹெக்டேரில் நெல் மற்றும் 4.30 லட்சம் ஹெக்டேரில் பருப்பு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. இத்துடன், முக்கிய உணவு தானியங்கள், 19.54 லட்சம் ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துக்கள், 4.79 லட்சம் ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளன.மேற்கண்டவை தவிர, கரும்பு, 43.92 லட்சம் ஹெக்டேரிலும், பருத்தி, 29.07 லட்சம் ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<u>விலை உயர்வால் முந்திரி ஏற்றுமதி பாதிப்பு</u>



**புதுடில்லி:**சர்வதேச அளவில், முந்திரி விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், அதன் ஏற்றுமதி குறைந்து உள்ளது.சென்ற மே மாதத்தில், ஒரு கிலோ முந்திரியின் ஏற்றுமதி விலை, 434.86 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இது, சென்ற ஆண்டு, இதே மாதத்தில்,397.42 ரூபாயாக இருந்தது.இதே காலத்தில், முந்திரி ஏற்றுமதி, 9,720 டன்னில் இருந்து 8,397 டன்னாகவும், அதன் மதிப்பு, 386.29 கோடியிலிருந்து, 365.17 கோடி ரூபாயாகவும் குறைந்துள்ளது. நடப்பாண்டு, ஏப்., – மே மாதங்களில், முந்திரி ஏற்றுமதி, 15,715 டன்னாக வீழ்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே காலத்தில், 19,904 டன்னாக இருந்தது. இதே காலத்தில், முந்திரி ஏற்றுமதி மதிப்பு, 761.96 கோடியிலிருந்து, 683.39 கோடி ரூபாயாகசரிவடைந்து உள்ளது.விலை உயர்ந்துள்ள நிலையிலும், நாட்டின் முந்திரி கொட்டை இறக்குமதி அதிகரித்துள்ளது. சென்ற மே மாதத்தில், இறக்குமதிக்கான ஒரு கிலோ முந்திரி கொட்டை யின் விலை, 54.02லிருந்து 64.63 ரூபாயாக உயர்ந்தது.இந்நிலையிலும், இதன் இறக்குமதி, அளவின் அடிப்படையில், 75,660 டன்னிலிருந்து, 1,05,173 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 408.68 கோடியிலிருந்து, 679.78 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது என, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு குழுவின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**'குறுவை சாகுபடிக்கு மேட்டூர் தண்ணீர் இல்லை'**

**மேட்டூர்**; அணைக்கு நீர்வரத்து அதிகரித்தாலும், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில்லை என, பொதுப்பணித் துறையினர் முடிவு எடுத்து உள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில், இந்த ஆண்டு, கோடை மழை பெய்த தால், உற்சாகம் அடைந்து நிலத்தடி நீர் பாசன விவசாயிகள் குறுவை சாகுபடியை துவங்கி உள்ளனர். அரசு இலக்கான, ஒரு லட்சம் ஏக்கரையும் தாண்டி, குறுவை சாகுபடி நடந்து வருகிறது. இந்த சூழ்நிலையில், தென்மேற்கு பருவமழையால், கர்நாடகாவில், கபினி அணை நிரம்பி உள்ளது. அங்கு இருந்து, காவிரி யில் உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கர்நாடகா வில் உள்ள, கே.ஆர்.எஸ்., உள்ளிட்ட அணைகளில் இருந்தும் உபரி நீர் திறக்கப்பட்டால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரிக்கும். இருப்பினும், 'குறுவை சாகுபடிக்கு, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை' என, பொதுப்பணித் துறையினர் திட்டவட்டமாக கூறி வருகின்றனர்.

இதுகுறித்து, பொதுப்பணித்துறை அதிகாரி, ஒருவர் கூறியதாவது: மேட்டூர் அணை, 93,470 மி.கன அடி கொள்ளளவு கொண்டது. தற்போது, நீர் இருப்பு, 13,730 மி.கன அடி. கடந்த ஆண்டு, இதே நாளில், 2,934 மி.கனஅடி நீர் மட்டுமே இருந்தது. அணைக்கு, நீர்வரத்து அதிகரித்துள்ளது. வரும் நாட்களிலும், நீர்வரத்து மேலும், அதிகரிக்கும். இருப்பினும், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட வாய்ப்பு இல்லை. குறுவை சாகுபடிக்கான காலம் கடந்து விட்டால், இனி அணையை திறந்தாலும், எந்த பயனும் இன்றி, தண்ணீர் வீணாகிவிடும். இனி, நாற்று நட்டு, பயிர் வளர்த்தால், வடகிழக்கு பருவமழையின் போது தான், நெல்மணிகள் முற்றும். அந்த நேரத்தில், பருவ மழையால் பயிர்கள் அழிந்து, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். எனவே, அணையில் போதுமான அளவிற்கு தண்ணீரை தேக்கி, சம்பா சாகுபடிக்கு முன்கூட்டியே திறந்து விட முடிவு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>"தலை' காட்டிய பருவ மழை:ஆறுதலடைந்த சிறு விவசாயிகள்</u>**

**ஊட்டி**:ஊட்டியில், ஏமாற்றி வந்த பருவ மழை, நேற்று தலை காட்டியது; இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.மாநிலத்தில், பரவலாக பெய்து வரும் தென் மேற்கு பருவ மழை, நீலகிரி மாவட்டத்தை ஏமாற்றி வந்த நிலையில், விவசாய நிலங்கள் வறண்டன; ஊட்டியில் விளையும் உருளைக் கிழங்கு, @கரட், முட்டை கோஸ் உட்பட பயிர்கள் நாசமாகி, விலைவாசி உயர்ந்தது. தொடர்ந்து, மழை

ஏமாற்றும் பட்சத்தில், விவசாயம் வெகுவாக பாதிக்கும் என, விவசாயிகள் அச்சமடைந்தனர். இந்நிலையில், நேற்று மதியம் ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், மழை பெய்தது; சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஊட்டியைச் சேர்ந்த சிறு விவசாயி துரைசாமி கூறுகையில்,""பொதுவாக, ஊட்டியில் ஜூன் முதல் வாரம் துவங்கி, கொட்டி தீர்க்கும் மழையில், விவசாய பயிர்கள் தழைத்து வளரும்; எங்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். ஆனால், ஏமாற்றிய மழையால், பெருத்த நஷ்டத்தை எதிர் கொண்டோம். நேற்று பெய்த மழை, ஆறுதலை அளித்தாலும், மழை தொடர்ந்து பெய்தால் மட்டுமே விவசாயம் செழிக்கும்," என்றார்.

**<u>வளம் காக்க நடவடிக்கை</u>**

**ராமநாதபுரம்**:இயற்கை முறையில் மண் வளத்தை மேம்படுத்தவும், மகசூலை அதிகரிக்கவும் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் நடப்பாண்டு "பசுந்தாள் உர பயிர்' ( தக்கை பூண்டு) சாகுபடிக்கான விதை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால் நெல் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டது. நீர் நிலைகள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றுவிட்டது. பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்திற்கு முழுக்கு போட்டு மாற்று பிழைப்புதேடி கோவை, திருப்பூர், சென்னை போன்ற வெளியூர்களுக்கு சென்றுவிட்டனர்.

மிளகாய் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மண்ணில் போதிய ஈரப்பதம் இல்லாததால் பெரும்பாலான விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறிவிட்டன. பயனற்ற விவசாய நிலங்களுக்கு மீண்டும் புத்துணர்வு ஊட்டும் வகையில் வேளாண் துறை சார்பில் "அட்மா' திட்டத்தின் மூலம் நடப்பாண்டு "பசுந்தாள் உர பயிர்' சாகுபடிக்கான விதைகள் ராமநாதபுரம், திருப்புல்லாணி, நயினார்கோவில், கடலாடி, முதுகுளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாய நிலங்களில் இவற்றை சாகுபடி செய்து விவசாயிகள் மண் வளத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்), கனகராசன் கூறியதாவது:இயற்கை உரம் மூலம் விவசாய சாகுபடி நிலங்கள் மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 20 கிலோ வீதம் ஏக்கருக்கு "பசுந்தாள் <உர பயிர்' சாகுபடி செய்வதற்கான விதை இலவசமாக வழங்கப்படுகின்றன.

திருப்புல்லாணி ஒன்றியத்தில் கிருஷ்ணாபுரம், பொக்காரேந்தல் பகுதி விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம். தற்போது, 30 நாட்கள் பயிராக வளர்ந்துள்ளது. 45 நாட்கள் முடிவில், நன்றாக பசுந்தாள் உர பயிர் வளர்ந்தவுடன், அவற்றை மடக்கி உழவேண்டும். மண்ணோடு மக்கிப்போவதால், இயற்கை உரமாக மாறிவிடுகிறது. இதில், அங்கக(உயிர்) சத்து அதிகம் இருப்பதால் பயிர்கள் நன்றாக வளர்ந்து, அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மாவட்டம் முழுவதும் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளோம். இதுவரை, 6 டன் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

**<u>மானிய விலையில் நிலக்கடலை விதை</u>**

**அருப்புக்கோட்டை:** மழை பெய்ய உள்ள நிலையில், அருப்புக்கோட்டை, செம்பட்டி, புலியூரான், கட்டங்குடி பகுதியில் கோடை உழவு தயார் செய்ய விவசாயிகள் கேட்டு கொள்ளபடுகிறார்கள். விவசாயிகளுக்கு தேவையான நிலக்கடலை வி.ஆர்.ஐ.2 மற்றும் கோ 4 விதைகளும், டி.எம்.பி., சான்று விதைகளும் அருப்புக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளது. சான்று பெற்ற விதைகளுக்கு 1 கிலோவிற்கு 15 ரூபாய் மானியம், ஆதார விதைகளுக்கு கிலோ 20 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தேவையான விவசாயிகள் அருப்புக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு வேளாண் உதவி இயக்குனர் மணிசேகரன் கேட்டு கொண்டுள்ளார்

## <u>குறுவை சாகுபடிக்கு 32.95 கோடி ரூபாயில் புதிய திட்டம்</u>

**திருச்சி**: நடப்பாண்டு குறுவை சாகுபடிக்காக, 32.95 கோடியில் சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது என, திருச்சியில் நடந்த, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருச்சி மாவட்டத்தில் ஆண்டு சராசரியாக, 762 மி.மீ., மழை பெய்ய வேண்டும். கடந்த ஜூன் மாதத்தில் சராசரி மழையளவு, 161 மி.மீ.,. ஆனால், திருச்சி மாவட்டத்தில், 149 மி.மீ., மழை பெய்துள்ளது. இதனால், கோடை உழவு செய்ய விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர்.

நடப்பாண்டில், 3,77 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள், திருச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில், 5.55 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய, இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் மட்டும், 9, 000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, நாற்றங்கால் விடும் பணிகளை விவசாயிகள் துவக்கி யுள்ளனர்.

குறுவை சாகுபடிக்கு ஏற்ற வகையில், ஆடுதுறை-36 மற்றும் ஆடுதுறை-43 ஆகிய, நெல் விதைகள், 40 டன் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம், 10 ரூபாய் மான்யத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

குறுவை சாகுபடி குறித்து, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், வேளாண்மை அதிகாரிகள் கூறுகையில், "" நடப்பு குறுவை பருவத்தை ஊக்குவிக்கும் வகையில், 32.95 கோடி ரூபாய் மதிப்பில், சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்துக்கு, 1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

திருந்திய நெல் சாகுபடி முறையில், சமுதாய நாற்றங்கால் அமைக்க, ஒரு ஏக்கர் நாற்றங்கால் அமைக்க, செலவினம், இடுபொருட்களுக்காக, 25 ஆயிரம் ரூபாய் மான்யமாக வழங்கப்படுகிறது. குறுவை நெற்பயிரின் உற்பத்தி திறனை அதிகரிக்க, 100 சதவீத மான்யத்தில், ஏக்கருக்கு ஐந்து கிலோ நெல், நுண்சத்து உரம் மற்றும், 10 கிலோ சிங் சல்பேட் உரம், 5,000 ஏக்கருக்குரிய பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், 20 விவசாய குழுக்களுக்கு, 100 சதவீத மான்யத்தில், நெல் நடவு இயந்திரமும், நெல் களையெடுக்கும் இயந்திரமும் வழங்கப்படுகிறது. பாசன நீர் விரையம் ஆவதை தவிர்க்க, ஒரு பயனாளிக்கு அதிகப் பட்சமாக, 180 மீட்டர்

நீளமுடைய, 150 யூனிட் 90 எம்.எம்., பைப்பும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

**<u>அரியலூர் மாவட்டத்தில் சூரிய ஒளி மின்சாரம் மூலம் இயங்கும் பம்புசெட் வேளாண் அதிகாரி ஆய்வு</u>**



தா.பழூர்,

**அரியலூர்;** மாவட்டத்தில் சூரிய ஒளி மின்சாரம் மூலம் இயங்கும் பம்புசெட்டை வேளாண் அதிகாரி ஆய்வு மேற்கொண்டார்.

<u>சூரியஒளி மின்சாரம்</u>

அரியலுீர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தை சேர்ந்த கண்டியங்கொல்லை செங்குட்டுவன் மற்றும் சோழமாதேவி ராமலிங்கம் ஆகியோர் தமிழக அரசின் மானியத்தில் அமைக்கப் பட்டுள்ள சோலார் மின் சாரத்தை கொண்டு இயக்கப் படும் பம்புசெட்டை தங்கள் விவசாய நிலத்தில் அமைத்துள்ளனர்.

இந்த விவசாய களத்திற்கு வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆரோக்யசாமி மற்றும் துறை அலுவலர்கள் சென்று ஆய்வு செய்தனர். அப்போது செயற் பொறியாளர் ஆரோக்யசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

80 சதவீதம் மானியம்

அரியலுாிர் மாவட்டத்தில் சூரியஒளி மின்சாரம் மூலம்5 எச்.பி மோட்டார் இயங்கும் படி அமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்த செலவு ரூ.3 லட்சத்து 99 ஆயிரத்து 822 ஆகும். இதற்கு விவசாயிகளுக்கு 80 சத மானியம், வழங்கப்படுகிறது. அதாவது ஒரு விவசாயி ரூ.95 ஆயிரத்து 342 மட்டும் அரசிடம் செலுத்தி சோலார் வசதியை தங்கள் விவசாய களத்திற்கு அமைத்து பயன் படுத்தி கொள்ளலாம்.

மின் வெட்டு பற்றி கவலைப் படாமல் எந்நேரமும் தங்கு தடையில்லாமல் நீர்வரத்தை பெற முடியும். இதன் மூலம் விவசாயம் காப்பாற்றப்படும்.

மற்ற பகுதிகளிலும்

அரியலுாிர் மாவட் டத்தில் ஜெயங்கொண்டம் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செந்துறையில் பெரியாக்குறிச்சி, பரணம், ஜெயங்கொண்டத்தில் இருதயபுரம் உள்ளிட்ட பல் வேறு பகுதிகளில் இத்திட் டத்தை விவசாயிகள் பயன் படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வில் உதவி செயற்பொறியாளர் மோகன கிருஷ்ணன், கிளை பொறுப்பாளர்கள் கலைமணி, அலாவுதீன், ரவிச்சந்திரன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>வறட்சியால் வரத்து குறைவு: கோவையில் காய்கறி விலை ‘கிடுகிடு’ உயர்வு பீன்ஸ் கிலோ ரூ.90; அவரைக்காய் கிலோ ரூ.80-க்கு விற்பனை</u>**



வறட்சியால் உற்பத்தி மற்றும் வரத்து குறைந்ததால், கோவையில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. அதிக பட்சமாக பீன்ஸ் கிலோ ரூ.90-க்கும், அவரைக்காய் கிலோ ரூ.80-க்கும் விற்பனையாகிறது.

காய்கறிகள்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி ரகங்கள் கோவை மார்க்கெட்டுகளுக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாக காய்கறி ரகங்கள் கிலோவுக்கு ரூ.30-க்கு உள்ளாகவே விற்பனை செய்யப்பட்டு வந்தன. இந்தநிலையில் கடந்த 10 நாட்களாக காய்கறிகளின் விலை 2 மடங்காக உயர்ந்து உள்ளது.

விலை எவ்வளவு?

அதிகபட்சமாக பீன்ஸ் கிலோ ரூ.90-க்கும், அவரைக்காய் கிலோ ரூ.80-க்கும் விற்பனையாகி வருகிறது. மற்ற காய்கறி ரகங்களை பொறுத்தவரை, கிலோ ரூ.30-க்கு விற்பனையான வெண்டைக்காய் தற்போது ரூ.45-க்கும், கிலோ ரூ.20-க்கு விற்பனையான கொத்தவரங்காய் தற்போது ரூ.30-க்கும், ரூ.24-க்கு விற்பனையான சின்ன வெங்காயம் தற்போது ரூ.30-க்கும், கிலோ ரூ.30-க்கு விற்பனையான

பெரிய வெங்காயம் தற்போது ரூ.35-க்கும் விற்பனையாகிறது.கிலோ ரூ.20-க்கு விற்பனையான பீட்ரூட் தற்போது கிலோ ரூ.50-க்கும், கிலோ ரூ.35-க்கு விற்பனையான கேரட் தற்போது ரூ.46-க்கும், கிலோ ரூ.25-க்கு விற்பனையான பாகற்காய் தற்போது ரூ.40-க்கும், கிலோ ரூ.30-க்கு விற்பனையான கத்தரிக்காய் தற்போது ரூ.60-க்கும், கிலோ ரூ.60-க்கு விற்பனையான அவரைக்காய் கிலோ ரூ.80-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

காரணம் என்ன?

கிலோ ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்ட மேரைக்காய் தற்போது ரூ.44-க்கும், கிலோ ரூ.6-க்கு விற்பனையான அரசாணிக்காய் தற்போது ரூ.50-க்கும், கிலோ ரூ.35-க்கு விற்பனையான குடைமிளகாய் தற்போது ரூ.50-க்கும், கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்ட முட்டைகோஸ் தற்போது ரூ.36-க்கும், தக்காளி கிலோ ரூ.20-க்கும், பச்சை மிளகாய் கிலோ ரூ.35-க்கும், முருங்கைக்காய் கிலோ ரூ.50-க்கும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.50-க்கும் விற்பனையாகிறது. இது தொடர்பாக கோவை ரத்தினபுரியை சேர்ந்த காய்கறி வியாபாரி ஜெகதீஸ் கூறியதாவது:-

பருவமழை குறித்த நேரத்தில் பெய்யவில்லை. இதனால் தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுகிறது. இதனால் அத்தியாவசிய பொருளான காய்கறி ரகங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது குறைந்த அளவே காய்கறி வரத்து உள்ளதால் விலை அதிகரித்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு



**மேட்டூர் :** கர்நாடக அணையில் நீர் திறப்பு அதிகரிப்பதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 5 ஆயிரம் கனஅடியாக உயர்ந்துள்ளது.கர்நாடக மாநிலத்தில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் அங்குள்ள கபினி அணை நிரம்பும் நிலையில் உள்ளது. இதனால் அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 4141 கனஅடி நீர் வந்து கொண்டிருந்த நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 5345 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 2ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 43.58 அடியாகவும், நீர் இருப்பு 14 டிஎம்சியாகவும் உள்ளது. இதனிடையே மேட்டூர் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பயிர் சாகுபடி செய்திருந்த விவசாயிகள், நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பயிர்கள் மூழ்கும் அபாயத்தில் அவசர அவசரமாக அதனை அறுவடை செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று பிற்பகல் 3 மணி நிலவரப்படி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 4,500 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது.

## <u>தேயிலை தூள்  விலை சரிந்தது</u>



**குன்னூர் :** நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 26வது ஏலம் புதன் கிழமை நடந்தது. இதில் மொத்தம் 6 லட்சத்து 98 ஆயிரத்து 127 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.இதில் இலை ரகம் 2 லட்சத்து 63 ஆயிரத்து 341 கிலோ, டஸ்ட் ரகம் 4 லட்சத்து 34 ஆயிரத்து 786 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர். இருப்பினும், தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். இதன் காரணமாக 80 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடனஂ அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை சரிந்தது. இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.51 முதல் ரூ.55, உயர் வகை ரூ.70 முதல் ரூ.75, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.60 முதல் ரூ.65, உயர்வகை ரூ.70 முதல் ரூ.75 வரை விலை கிடைத்தது.தேயிலை வரத்து அதிகரித்து வரும் நிலையில் அதன் விலையும் விற்பனை அளவும் வெகுவாக சரிந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## <u>பெரியவெங்காயம் விலை உயர்வு</u>

**கோவை**, : மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து கோவை மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் கிலோ ரூ.18க்கு விற்கப்பட்ட பெரிய வெங்காயம் ரூ.10 அதிகரித்து நேற்றைய நிலவரப்படி ரூ.28க்கு விற்கப்பட்டது.

நவம்பர் மாதம் முதல் பெரிய வெங்காய சீசன் காலமென்பதால், கடந்த 5 மாதங்களாகவே மகாராஷ்டிரா மாநிலம் நாசிக், அகமத்நகர், சோலாபூர், பகுதிகளில் விளைச்சல் அமோகமாக இருந்தது. இதனால், கோவை காய்கறி மார்க்கெட்டுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் 600 டன்னும், மற்ற நாட்களில் 200 முதல் 400 டன்னும் பெரிய வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. தேவைக்கும் அதிகமாக வெங்காய வரத்து இருந்ததால் கடந்த மாதங்களில் 1 கிலோ பெரிய வெங்காயம் ரூ.18க்கு விற்றது. இந்நிலையில் கடந்த வாரங்களில் மஹாராஷ்டிரா மாநிலத்தில் பெரிய வெங்காயம் சீசன் நிறைவடைந்துள்ளது. இதன் எதிரொலியாக கோவை மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்து 150 முதல் 200 டன் அளவே பெரிய வெங்காயம் வருகிறது. விலை ரூ.10 உயர்ந்துள்ளது. கடந்த மாதத்தில் கிலோ ரூ.18க்கு விற்ற பெரிய வெங்காயம் நேற்றைய நிலவரப்படி ரூ.10 அதிகரித்து ரு.28க்கு விற்றது.

அதே போல், ஆலாந்துறை, செம்மேடு, தொண்டாமுத்தூர், நரசீபுரம், பல்லடம், ஜல்லிபட்டி பகுதிகளில் சின்னவெங்காயம் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், கடந்த மாதத்தில் கிலோ ரூ.17க்கு விற்கப்பட்ட சின்னவெங்காயம் ரூ.8 அதிகரித்து ரூ.25க்கு விற்கப்பட்டது.

இதுகுறித்து வெங்காய வியாபாரி ஒருவர் கூறுகையில், ஆகஸ்ட் மாதம் கர்நாடக சீசன் ஆரம்பித்து பெரிய வெங்காய வரத்து அதிகரிக்கும். அந்த சமயத்தில் விலை குறைய வாய்ப்புள்ளது‘ என்றார்.

**<u>காரீப் பருவ சாகுபடிக்கான வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகம்</u>**

**பொன்னமராவதி**, : பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு காரீப் பருவ சாகுபடிக்கு தேவையான வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வினியோகிக்கப்படுவதாக வேளா ண்மை உதவி இயக்குநர் ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: தற்போது பெய்துள்ள கோடை மழையை பயன்படுத்தி கோடைஉழவு செய்து மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகப்படுத்தலாம். களைகளின் வேர்களையும், விதைகளையும் அழிப்பதன் மூலம் பயிடும்போது களைகளினால் ஏற்படும் மகசூல் இழப்பை தடுக்கலாம். நடப்பு காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக கே 6 ரக

நிலக்கடலை விதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. இதே போல குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக ஆடுதுறை 45 ரக சான்று பெற்ற நெல் விதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. வேளாண் கருவிகளை பொருத்தவரை நிலத்தை உழுது சமன்படுத்தும் ரொட்டவேட்டர் கருவி மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. மேலும் பயறு விளைச்சலை அதிகப்படுத்தும் சான்று பெற்ற உளுந்து, தட்டைப்பயறு, பச்சைப்பயறு விதைகள், உயிர் உரங்கள், நுண்சத்துக்கள் என அனைத்தும் மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இப்பருவத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரிக்க தற்போது இடைஉழவு செய்து உயிர் உரங்கள், ரசாயன உரங்கள் மற்றும் நுண்சத்து உரங்கள் இடவேண்டி யது அவசியமாகும். மேலும், தக்கைப்பூண்டு, சணப்பு போன்ற விதை களை அடர்த்தியாக விதைத்து மடக்கி உழுவதன் மூலம் தென்னை மகசூலை அதிகரிக்கலாம். தக்கைபூண்டு விதைகள் மானிய விலை யில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், அறு வடை செய்யும் வேளாண் பொருட்களை நல்லமுறையில் காயவைத்து சுத்தம் செய்ய தேவையான தார்பாய்கள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. எனவே பொன்னமராவதி வட்டார விவசாயிகள் தங்களுக்கு தேவையான அனைத்து வேளாண் இடுபொருட்களையும் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையம் மூலம் பெற்று பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயபாலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பயிர் விளைச்சலுக்கு முன் மண் பரிசோதனை அவசியம் விழிப்புணர்வு முகாமில் அதிகாரி விளக்கம்

**புதுக்கோட்டை**, : திருச்சி நவலூர் குட்டப்பட்டில் அமைந்துள்ள அன் பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் 11 மாணவர்கள் கொண்ட குழுவினர் புதுகை வட்டாரத்தில் நடந்து வரும் பயிர் சாகுபடி குறித்து களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இப்பயிற்சியின் ஓர் நிகழ்வாக புதுக்கோட்டை வட்டாரத்தில் அறந்தாங்கி ஒன்றியம் எருக்கலக்கோட்டை கிராமத்தில் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் பரிசோதனைக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வம்பன் மண் பரிசோதனை திட்ட செயலாளர் மாணிக்கவள்ளி கலந்துகொண்டு மண் மாதிரி எடுத்தல் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறுகையில், பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர் விளைச்சலுக்கு முன்

கண்டிப்பாக மண் பரிசோதனை செய்ய வேண்டும். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் வயலிலுள்ள மண்ணின் தரம், மண்ணின் கார, அமில தன்மை, மண் நயம், சுண்ணாம்பு நிலை, உப்பின் நிலை, மண்ணில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்கள் போன்ற விபரங்களை அறிய முடியும். இந்த மண் பரிசோதனை வாயிலாக விவசாயிகள் உபயோகிக் கும் உரங்களின் அளவுகளைக் கொல்லிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் உபயோகித்தை குறைத்து தாங்கள் நிலத்திற்கு தேவையான சரியான அளவில் தேவையான நுண்ணூட்டச்சத்துடன் உரத்தினை அளிக்க முடியும். மண் பரிசோதனையின் வாயிலாக விவசாயிகள் மண்ணின் தரத்தை அறிவதோடு அதற்கேற்ப பொருத்தமான பயிரினை சாகுபடி செய்ய வழிவகுக்கும். மேலும் மண்ணிலுள்ள தழைச்சத்து, மணிசத்து, சாம்பல் சத்து ஆகிய பயிர் வளர்ச்சிக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் நிலை பற்றி அறிய இயலும். மண் பரிசோதனையின் முடிவில் மண் தரத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேளாண் அறிவியல் நிலையம் மூலம் மண் சீர்திருத்த தகவல்களும் அளிக்கப்படுகின்றன. இதற்காக விவசாயிகள் வம்பன் வேளாண அறிவியல் நிலையத்தில் மண்பரிசோதனை ஆய்வு கட்டணம் ரூ.25 மற்றும் பாசன நீர் ஆய்வுகட்டணம் ரூ.10 மட்டும் செலுத்தி மண் மற்றும் நீரின் தன்மையை அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு பயிர் சாகுபடி செய்யலாம் என்றார். இப்பயிற்சியில் எருக்களக்கோட்டை கிராம விவசாயிகள் வயலில் வேளாண் கல்லூரி மாணவர்கள் மூலம் மண் மற்றும் பாசன நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு ஆராய்ச்சிக்காக கொண்டு செல்லப்பட்டது. மேலும் வேளாண் கல்லூரி மாணவர்கள் பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு மண்மாதிரி எடுக்கும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். இப்பயிற்சியில் வம்பன் வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்ப வல்லுநர்கள், அன்பில் தர்மலிங்க வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிர் சாகுபடி விவசாயிகள் பங்கு பெற்று ஆலோசனைகளை கேட்டறிந்தனர்.

## <u>வத்திராயிருப்பு பகுதியில் விதைக்காக குதிரைவாலி சாகுபடி</u>

**வத்திராயிருப்பு**, : வத்திராயிருப்பு பகுதியில் விதைக்காக குதிரைவாலி சாகுபடி செய்யப்பட்ட விளைநிலங்களை வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். வத்திராயிருப்பு வட்டாரத்தில் நீர்வள நிலவள திட்டத்தில், கோடை பருவத்தில் குதிரைவாலி விதை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்காக குறைந்த அளவு நீரைக்கொண்டு குதிரைவாலி சாகுபடி செய்வது குறித்து வேளாண்துறையினர் விவசாயிகளுக்காக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தினர்.

இதையடுத்து, கோவை, வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் குதிரைவாலி விதைப்பண்ணை அமைப்பதற்காக 125 கிலோ சிளி(ரிஸ்)2 ரக குதிரைவாலி விதை விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் வத்திராயிருப்பு வட்டார த்தில் தற்போது 17 எக்டேர் பரப்பில் விதை உற்பத்திக்காக குதிரைவாலி பயிரிடப்பட்டுள்ளது.

அயன்கரிசல்குளம், மகாராஜபுரம், சேதுநாராயணபுரம், வ.புதுப்பட்டி,

வத்திராயிருப்பு பகுதிகளில் குதிரைவாலி சாகுபடி செய்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதன்மூலம் சுமார் 40 மெட்ரிக் டன் விதைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்த விதைகள் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்பட உள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். விதைப்பண்ணைகளை வேளாண்மை அலுவலர் கணேசன், உதவி அலுவலர்கள் ராமன், முத்துசரவணன், சுந்தரம் உள்ளிட்டோர் பார்வையிட்டு, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

**ரோஜா பூ விலை சரிவு: கிலோ ரூ.120**

**ஈரோடு**, : ஈரோடு பஸ் ஸ்டாண்ட் பகுதியில் அதிக அளவில் பூக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கடைகளுக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அண்டை மாவட்டங்களில் இருந்தும் பூக்கள் கொண்டுவரப்பட்டு விற்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக ரோஜா பூக்களின் விலை உச்சத்தில் இருந்து வந்த நிலையில் தற்போது சீசன் தொடங்கி உள்ளதால் விலை சரிய தொடங்கி உள்ளது.

முகூர்த்தம், விசேஷ நாட்களில் கிலோ ரூ.250 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த ரோஜா பூக்களின் விலை, தற்போது பூக்களின் வரத்து அதிகரிக்க தொடங்கியதால் கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. நேற்றைய பூ விலை (கிலோ) விபரம்: மல்லி ரூ.160, முல்லை ரூ.160, ஜாதி முல்லை ரூ.260, கனகாம்பரம் ரூ.220, அரலி ரூ.70, சம்பங்கி ரூ.120, கோழிக்கொண்டை ரூ.80, செண்டுமல்லி ரூ.60க்கு விற்பனை செய்யப்பட்டது.